மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.68/2021

பெயர் – ராஜாராம் (வா.சா.1)

நாள் – 19.07.2023

பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., M.Ed படித்துள்ளேன். என்னை எனது தகப்பனார் பூல்ராஜ் தான் படிக்க வைத்தார் என்றாலும் எனது படிப்புக்கான அனைத்து செலவுகளையும் அவர்தான் செலவு செய்தார் என்றாலும் சரிதான். நான் எங்கு படித்தேன் என்றால் சாத்தூர் எட்வேர்டு பள்ளியில் படித்தேன். M.Sc எங்கு படித்தேன் VHNSN செந்தில்குமார் நாடார் கல்லூரியில் படித்தேன். இந்த வழக்கை என்ன படிகாரம் கோரி தாக்கல் செய்தேன் என்றால் என் பெயரில் எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த உயிலில் உள்ள சொத்தை ராமுத்தாய் மற்றும் ராஜம்மாள் எனது தகப்பனாரை அழைத்து சென்று கிரையம் பெற்றுள்ளார்கள். ராமுத்தாய் மற்றும் ராஜம்மாள் எனது தகப்பனாரை அழைத்து சென்று உயிலில் கண்ட சொத்துக்களை நான் கிரையம் பெற்றதாக நான் பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை எனக்கு எப்போது உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் 2010ம் ஆண்டு சர்வே எண்.350/10ஐ பொருத்தும் எழுதிக்கொடுத்தார். அந்த சொத்து உயிலில் கண்டுள்ள சொத்து ஆகும். சர்வேஎண்.333/5 என்ற வீட்டையும் எழுதிக்கொடுத்துள்ளார். அது உயிலில் இல்லாத சொத்து ஆகும். நான் கல்லூரியில் படிக்கும் காலத்தில் எனது தகப்பனார் மட்டும்தான் கல்லூரியில் அழைக்கும்போது வருவார் என்றால் சரிதான். குடும்ப அட்டையை பார்த்தால் அந்த குடும்பத்தில் எத்தனை நபர்கள் உள்ளார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். எனக்கு என்ன வயது என்றால் 50 வயது. எனக்கு 31 வயதில் திருமணம் ஆனது. எனது திருமணத்திற்கு முன்பாக குடும்ப அட்டையில் எனது தாய், தகப்பனார், தங்கை, மற்றும் என்னுடைய பெயர்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டையில் என்னுடைய தகப்பனாரின் பெயராக பூல்ராஜ்ம் , தாயாரின் பெயராக ராஜம்மாள் என்ற பெயரும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தாயார் பெயர் காளியம்மாள் ஆகும். அவரை குடும்ப அட்டையில் சேர்க்காமல் ராஜம்மாளை சேர்த்துள்ளார்கள். நான் எனது தாயார் காளியம்மாளுடன்தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் எனது தாயார் காளியம்மாளுடன் வசித்து

இருந்தால் குடும்ப அட்டையில் எனது தாயாருடன் எனது பெயர் இணைந்து இருக்க வேண்டும் என்றால் என்னை மட்டும் எனது தகப்பனாரின் குடும்ப அட்டையில் சேர்த்துள்ளார்கள். தபசில் 2வது அயிட்ட சொத்தை எனக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தபசில் 2வது அயிட்ட சொத்து எனது தகப்பனாருக்கு சுயார்ஜிதமான சொத்து என்றால் சரிதான். எனது தகப்பனார் 2.11.2010ம் தேதியில் எனக்கு உயில் எழுதிக்கொடுத்தார். நான் கல்லூரியில் படிக்கும்போது எனது தாயாரை எப்போதாவது அழைத்துள்ளார்களா என்றால் இல்லை. எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணம் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உயிலில் கண்டுள்ள எனது தந்தைக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும், எனது நிரூபண உறுதிக்கூற்றிலும் எனது தந்தை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு செலவு செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை படிக்க வைத்தது எனது தகப்பனார் என்று சொல்லியுள்ள நிலையில் அதற்கான செலவுகளை எனது தகப்பனார் தான் செலவு செய்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிருடன் இருந்த வரையில் என்னையும் சேர்த்துதான் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த உயில் ஆவணத்தில் அதில் கண்டுள்ள சொத்துக்கள் தனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றுதான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பொதுவாக ஒருவருக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை அவர் யாருக்கு வேண்டுமானாலும் உரிமை மாற்றம் செய்யலாம் என்றால் சரிதான். உயிலை பிறப்பித்து கொடுத்த ஒருவர் தனது வாழ்நாளில் எப்போது வேண்டுமானாலும் அதை ரத்து செய்வதற்கு அவருக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். 2010ம் ஆண்டு எனக்கு எழுதிக்கொடுத்த உயில் ஆவணமான வா.சா.ஆ.2 ல் 2வது பக்கத்தில் என் ஆயுளுக்குள் மாற்றவும் ரத்து செய்வதற்கும் எனக்கு உரிமை உண்டு என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். அதனால் எனது தந்தை உயிருடன் வாழ்ந்த நாளில் அவர் பிறப்பித்து கொடுத்த வா.சா.ஆ.2 ஐ ரத்து செய்வதற்கும், மாற்றம் செய்வதற்கும் அவருக்கு உரிமை உண்டு என்றால் சரிதான். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 23.5.2021ம் தேதியில் இறந்தார். அப்போது

அவருக்கு வயது 80. எனது தந்தை படிக்கவில்லை. எனது தந்தை நோய்வாய்பட்டு தான் இறந்தார் என்றால் சரிதான். பொதுவாகவே வயது முதிர்ந்தவர்களுக்கு கை, கால் நடுக்கம் ஏற்பட்டு அவர்களால் தன்னிச்சையாக இயங்க முடியாது என்றால் சரிதான். கை நடுக்கம் ஏற்படுவதால் கையெழுத்து போடாமல் இருப்பதற்கு வாய்ப்பு உண்டா என்றால் சரிதான். பொதுவாக அவ்வாறு கையெழுத்து போடாமல் இருக்கும் நிலையில் கைரேகை வைப்பது வழக்கம் என்றால் சரிதான். பொதுவாக அவ்வாறு கைரேகை வைக்கும்போது அந்த ஆவணத்தில் இன்னாரால்தான் வைக்கப்பட்டது என்று குறிப்பிட்டு இருக்கும் என்றால் சரிதான். நான் பள்ளியில் படிக்கும்போதோ, கல்லூரியில் படிக்கும்போதோ எனது குடும்ப அட்டையை கேட்கும்போதோ எனது தயாரார் காளியம்மாளுடன் நான் இருந்ததாகத்தான் குடும்ப அட்டை தாக்கல் செய்தேன் என்றால் குடும்ப அட்டை தாக்கல் செய்யவில்லை. நான் பள்ளி மற்றும் கல்லூரி காலத்தில் விடுதியில் தான் தங்கியிருந்தேன். அந்த காலகட்டத்தில் என்னிடம் குடும்ப அட்டை கேட்டார்களா என்றால் இல்லை. என்னை பற்றி விவரம் தெரியாமலேயே விடுதியில் சேர்த்தார்களா என்றால் இல்லை. சாதி சான்றுதல், வருவாய் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் ஆகியவற்றை கேட்டார்கள். குடும்ப அட்டையை கேட்கவில்லை. சாதி சான்றுதல், வருவாய் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் ஆகியவற்றில் எனது தாய், தந்தை பெயர்கள் குறிப்பிட்டு இருக்கும் என்றால் சரிதான். அந்த சாதி சான்றுதல், வருவாய் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

கு.வி. தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.